இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1727 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள் - வெற்றிடம்

பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம்

ஆராய்ச்சி உதவியாளர் - தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு

பாராளுமன்ற சபைமுதல்வர் அலுவலகத்தின் ஒரு (1) ஆராய்ச்சி உதவி யாளர் - தரம் (III) பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2011.10.21 ஆந் திகதியோ அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு "சபை முதல்வரின் செயலாளர், சபை முதல்வர் அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர – கோட்டே'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆராய்ச்சி உதவியாளர் - தரம் III பதவி'' எனக் குறிப்பிடல் வேண்டும். இவ்வறிவித்தலின் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

1. **சம்பள அளவுத்திட்டம்**.- மாதாந்தம் ரூபா 15,215 – 10 x 215 – 4 x 240 – 7 x 230 – 15 x 360 – ரூபா 29,965 ஆகும்.

2. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

3. **வயது**.- 2011.10.21 ஆந் திகதி 21 வருடங்களுக்கு குறையாத 35 வருடங்களுக்கு மேற்படாத வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **சேவைக்கான ஆட்சேர்ப்பு**.- அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உள்ளடக்கப்பட்டு அதிகூடிய புள்ளியைப் பெறுபவர் பதவிக்காக தெரிவு செய்யப்படுவார்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுகின்ற விதம் கீழே காட்டப்பட்டவாறு அமையும் :-

(i)	கல்வித்தகைமைகளுக்காக	- 15 புள்ளிகள்
(ii)	பதவியுடன் தொடர்புடையதாக பெற்றுள்ள தொழில்சார் தகைமைகளுக்காக	- 15 புள்ளிகள்
(iii)	மொழித் தேர்ச்சிக்காக	- 15 புள்ளிகள்
(iv)	கணினி அறிவுக்காக	- 20 புள்ளிகள்
(v)	பதவியுடன் தொடர்புடையதாக விடயத் துறையில் பெற்றுள்ள பயிற்சி மற்றும் அனுபவத்திற்காக	- 30 புள்ளிகள்
(vi)	தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்பால் திறன்கள்	- 05 புள்ளிகள்
		100 புள்ளிகள்

5. **சேவை நிபந்தனைகள்** :

* இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் /விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.
* இப்பதவி மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு கட்டுப் பட்டதாக வழங்கப்படும்.
* இப்பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 07/2007 இன் படி சேவையில் சேர்ந்து ஐந்து (05) வருடங்களுக்குள் இரண்டாவது மொழித் தேர்ச்சியைப் பெறல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலமாக சேவையில் சேர்ந்த அலுவலர்களால் அரச கரும மொழியிலான தேர்ச்சி தகுதிகாண் காலத்தில் பெறப்படல் வேண்டும்.
* தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாதல் வேண்டும்.

6. **பிற தகைமைகள்** :

* இலங்கையராதல் வேண்டும் ;
* சிறந்த குணநலன் கொண்டிருத்தல் வேண்டும் ;
* பதவிக் கடமைகளை ஈடேற்றப் போதுமான உடல் மற்றும் உளரீதியான தகுதியைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளைத் தமது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டப்படிப்புச் சான்றிதழும் ஏனைய கல்விச் சான்றிதழ்களும் ;

(இ) அனுபவத்தை நிரூபிக்கவல்ல தொழில்சார் மற்றும் /அல்லது ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பில் பெற்றுள்ள பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் ;

(ஈ) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணநலன் சான்றிதழ்கள்.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்ற சபை முதல்வரின் செயலாளர்.

சபை முதல்வர் அலுவலகம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
2011, செத்தெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம்

ஆராய்ச்சி உதவியாளர் - தரம் (III) பதவி

1. முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்கள்) :-----.
2. முழுப்பெயர் :-----.
3. தனிப்பட்ட முகவரி :-----.
4. பிறந்த திகதி :-----.
   ஆண்டு ----- மாதம் ----- திகதி -----
5. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :
   வருடங்கள் ----- மாதங்கள் ----- நாட்கள் -----
6. வதியும் மாவட்டம் :-----.
7. (அ) (ஆண்/பெண்) பால் நிலை :-----.
   (ஆ) விவாகமானவரா /விவாகமாகாதவரா என்பது :-----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
9. கல்வித் தகைமைகள் :-----.
10. தொழில்சார் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என்பதை நான் தெரிவு செய்யப்பட முன்னர் அறிந்து கொண்டால் தகைமை நீக்கத்திற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது பற்றி அறிந்து கொண்டால் எனக்கு எவ்விதமான நட்டஈட்டினையும் செலுத்தாமல் என்னைச் சேவையிலிருந்து நீக்குவதற்கும் கட்டுப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.
10-33

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2011

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு விண்ணப்பங்களைக் கோருவ தற்காக 2011, யூன் 24 ஆந் திகதிய 1712 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் உள்ளடக்கி யுள்ள தகைமைகளான 7 ஆம் பிரிவின் உப பிரிவுகள் (III), (IV), (VI)-II மற்றும் 9 ஆம் பிரிவின் (இ) என்பன பின்வருமாறு அமைச்சரவை சிபாரிசு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்கீழ் மாற்றியமைக்கப்படுகின்றன :-

உப பிரிவு 7 (III) :

''ஏதாவது ஒரு மொழி மூலம் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.''

உப பிரிவு 7 (IV) :

''விண்ணப்பங்களின் இறுதித் திகதியன்று 30 வயதினை அடைந் திருத்தல் ஆகாது''

உப பிரிவு 7 (VI) :

''விண்ணப்பங்களின் இறுதித் திகதியன்று பரீட்சைக்காக விதித்துரைக் கப்பட்ட தகைமைகளை ஒவ்வொரு வழியிலும் திருப்திப்படுத்தியிருத்தல் வேண்டும்.''

உப பிரிவு 9 (C) :

"பூர்த்தியாக்கப்பட்ட பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 2011.11.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.''

வர்த்தமானப் பத்திரிகையில் உள்ள ஏனைய செயற்பாடுகள் மாற்றமின்றி அப்படியே இருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரில்,
பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2011, செத்தெம்பர் 27.
10-286

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு எடுத்தல் - 2012

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2011.11.03 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மனுக்கோரல் விண்ணப்பப்படிவங்களையும், குறித்த விபரங்களையும் அந்தந்த மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக ரூபா 250 ஐ செலுத்தி 2011.11.03 ஆந் திகதியன்று ந. ப. 12.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

மாகாணம்	மாவட்டம்	பிரதேச நில அளவை அலுவலகம்	விண்ணப்பப்பத்திரங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள்	கேள்விமனு ஒப்படைத்தல்
வடமத்திய மாகாணம்	பொலன்னறுவை	ஹிங்குரான்கொட	மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (வடமத்திய மாகாணம்)/மாவட்ட நிலஅளவை அலுவலகம், பொலன்னறுவை	மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம் (வடமத்திய மாகாணம்), அனுராதபுரம்

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

முத்திரையிடப்பட்ட, தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களின் பாவனைக்கு கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்" (இடங்களின் பெயர்) எனக் குறிப்பிட்டு 03.11.2011 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05.
10-91

பொருட்கள் விற்பனவும் பிறவும்

நீதிவான் நீதிமன்றம் - கல்முனை

நீதிமன்ற சான்றுப்பொருட்கள் ஏலவிற்பனை

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்பட்டதுமான கீழ்க்காணும் பொருட்கள் எதிர்வரும் 29.10.2011 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவரும் இருந்தால் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொதுமக்கள் எவரும் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையில் இருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்திவிடல் வேண்டும்.

5. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

எம். ஐ. எம். றிஸ்வி,
நீதிவான்,
கல்முனை நீதிவான் நீதிமன்றம்.

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.
07.09.2011.

அட்டவணை

வழக்கு இலக்கம்	விபரம்	தொகை
1. AR/2250/2004	அடிச்சட்ட இல. V50-6924084 இயந்திர இல. V50-6924084 மேட் 50 யமஹா மோட்டார் சைக்கிள்	1
2. 29620/2003	அடிச்சட்ட இல. C50-5348111 இயந்திர இல. C50E-53486994 117-8433 C50 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
3. AR/683/2009	அடிச்சட்ட இல. 96J10F 00217 இயந்திர இல. 96J10E 08117 154-4049 CD 100 D ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
4. 53913/2009	அடிச்சட்ட இல. C50-0417682 இயந்திர இல. C50E-0477804 EP/JF-0503 CD50 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
5. 55127/2009	அடிச்சட்ட இல. CD 70-2128 இயந்திர இல. CD 70E-2138824 90 Sri 7701 CD70 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
6. AR/1201/2009	அடிச்சட்ட இல. 01F21C11863 இயந்திர இல. 01F21M06531 EP/GI-9123 பெஷன் பிளஸ் ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
7. 54111/2009	அடிச்சட்ட இல. 98E12F00003 இயந்திர இல. 98E10E-01484 153-7187 CD-100SS ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
8. 35855/2004	அடிச்சட்ட இல. YT200000684 இயந்திர இல. 139FM20003244 சைனிஸ் மேட் மோட்டார் சைக்கிள்	1
9. AR/788/2008	அடிச்சட்ட இல. LCLPBJLX2Y6001071 இயந்திர இல. CL157FMTYG 20026 மோட்டார் சைக்கிள்	1
10. 55388/2009	அடிச்சட்ட இல. MD70-2000166 இயந்திர இல. MD70E-2000180 EP/GF-7181 MD70 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
11. AR/1330/2009	அடிச்சட்ட இல. MB3HA10EG6GH00959 இயந்திர இல. 06HO8M28939 WP/JH-0543 ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
12. AR/890/2009	அடிச்சட்ட இல. GF68002200 இயந்திர இல. GG68002430 EP/ML-4660 Kirentel மோட்டார் சைக்கிள்	1
13. 57622/2009	அடிச்சட்ட இல. 04C47M00049 இயந்திர இல. 04C47C00077 EP/JA-4905 CBZ ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
14. 48475/2008	அடிச்சட்ட இல. LAELGZ403YA560182 இயந்திர இல. 157FM MI 0050507563 QM-125 மோட்டார் சைக்கிள்	1
15. 34749/2004	அடிச்சட்ட இல. C50-9057075 இயந்திர இல. காணப்படவில்லை எரிந்த மோட்டார் சைக்கிள்	1
16. 60067/2010	அடிச்சட்ட இல. C50-0874281 இயந்திர இல. C50E-0830938 EP/TB-4030 C50 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
17. 26083/2009	அடிச்சட்ட இல. AC01-1108610 இயந்திர இல. AC01E-1019254 136-8788 M5 ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
18. AR/239/2008	அடிச்சட்ட இல. YTZ00000637 இயந்திர இல. YT-J49 116-5023 சைனா மேட் மோட்டார் சைக்கிள்	1
19. 44271/2007	அடிச்சட்ட இல. 05F27M12542 இயந்திர இல. 05F27E12981 EP/MP-2125 ஸ்பிளண்டர் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
20. 52956/2009	அடிச்சட்ட இல. 00J46C0106 இயந்திர இல. 00541MO1417 EP/GO-1465 CBZ ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
21. 57304/2010	அடிச்சட்ட இல. C50-0550056 இயந்திர இல. C50E-0550570 EP/GE-4986 C50 ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்	1
22. 9202/1996	அடிச்சட்ட இல. 24F95BO1315 இயந்திர இல. 24M95B02925 200-3522 Bajaj முச்சக்கர வண்டி	1
23. 58205/2010	அடிச்சட்ட இல. 098407 இயந்திர இல. EP/SB-3459 கை உழவு இயந்திரம்	1
24. AR/1761/2009	அடிச்சட்ட இல. இயந்திர இல. இழுவைப் பெட்டி	1
25. 60122/2010	அடிச்சட்ட இல. EN8000001280 இயந்திர இல. EP/SE-3329 கை உழவு இயந்திரம்	1
26. 40796/	தங்கச் சங்கிலி (உடைந்த) 8.4g (18ct)	1
27. 10908/1997	தங்க மோதிரங்கள் 2.8g (18ct)	2
28. AR/517/2008	தங்கச் சங்கிலி 4.2g (22ct)	1
29. 41348	3 தங்க முத்துக்கள் 1.4g (18ct)	1
30. 31183	02 தங்க சங்கிலித் துண்டுகள் ஒரு பெண்டன் 3.8g (18ct)	1
31. 51759	0015200 ரெலி துவிச்சக்கர வண்டி	1
32. 44873	56072140 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
33. 48590	24060103 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
34. 42430	பிரேம் துவிச்சக்கர வண்டி	1
35. 44147	6928444 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
36. 42025	லுமாலா துவிச்சக்கர வண்டி	1
37. 43341	1450 ஆசியா துவிச்சக்கர வண்டி	1
38. 40484	12287618 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
39. 47912	5533028 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
40. 37239	55917185 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
41. 37404	609167 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
42. 44257	LB 128703 சைனா துவிச்சக்கர வண்டி	1
43. 38368	02A2951 இனம் தெரியாத துவிச்சக்கர வண்டி	1
44. 48002	69255086 இனம் தெரியாத துவிச்சக்கர வண்டி	1
45. 45115	இனம் தெரியாத துவிச்சக்கர வண்டி	1
46. 45115	இனம் தெரியாத துவிச்சக்கர வண்டி	1
47. 45115	இனம் தெரியாத துவிச்சக்கர வண்டி	1
48. B/19	5661593 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
49. AR/904	லுமாலா துவிச்சக்கர வண்டி	1
50. AR/940	9189090 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
51. AR/903	22278 சைனா துவிச்சக்கர வண்டி	1
52. AR/380	57139463 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
53. AR/818	ஹம்பர் துவிச்சக்கர வண்டி	1
54. AR/1199	998 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
55. AR/1668	682975 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
56. AR/1856	NCL 10398 சைனா துவிச்சக்கர வண்டி	1
57. AR/1857	சைனா துவிச்சக்கர வண்டி	1
58. AR/1857	சைனா துவிச்சக்கர வண்டி	1
59. AR/1857	சைனா துவிச்சக்கர வண்டி	1
60. AR/302	பைப் ஸ்டார் துவிச்சக்கர வண்டி	1
61. AR/1636	M56002398 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
62. AR/1854	M B P 0161 சைனா துவிச்சக்கர வண்டி	1
63. AR/1639	CL 47929 ரொன்சன் துவிச்சக்கர வண்டி	1
64. AR/2145	1420950 ஹீரோ துவிச்சக்கர வண்டி	1
65. AR/2146	69280445 லுமாலா துவிச்சக்கர வண்டி	1
66. AR/2147	KL 6021252 சைனா துவிச்சக்கர வண்டி	1
67. 23897	லுமாலா துவிச்சக்கர வண்டி	1
68. B/19/2008	நொக்கியா கைத்தொலைபேசி	1
69. 31705/2004	19' இரும்புப் பைப்	2
70. 46274/2007	இரும்புப் பட்டம்	1
71. AR/1113/2009	சீவுளி (Carpentry)	1
72. 47940/2007	இரும்புப் பைப்	10
73. 45201/2007	நிறுவைத் தராசு	1
74. 45202/2007	நிறுவைத் தராசு	1
75. 45203/2007	நிறுவைத் தராசு	1
76. 45204/2007	நிறுவைத் தராசு	1
77. 45205/2007	நிறுவைத் தராசு	1
78. 45206/2007	நிறுவைத் தராசு	1
79. 45207/2007	நிறுவைத் தராசு	1
80. 45208/2007	நிறுவைத் தராசு	1
81. 45210/2007	நிறுவைத் தராசு	1
82. 45212/200	நிறுவைத் தராசு	1
83. 45217/2007	நிறுவைத் தராசு	1
84. 45216/2007	நிறுவைத் தராசு	1
85. 45214/2007	நிறுவைத் தராசு	1
86. 45215/2007	நிறுவைத் தராசு	1
87. 45217/2007	நிறுவைத் தராசு	1
88. 36038/2004	அலுமினியம் கம்பி வயர்	2 Roll

10-144

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

பண்டாரகமை, இறம்புக்கனை, இல. 86 ஐச் சேர்ந்த றம்புக்கன பளிஹவடனகே ஹிரன்த பிரசாத் ஆகிய நான், பண்டாரகமை, இறம்புக்கனை இல. 53 ஐச் சேர்ந்த உடுவகே கசுன் தனுஷ்க பெரேரா என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு காமினி ஏக்கநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப் பட்டு 2004.08.16 ஆந் திகதியிடப்பட்ட 483 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழிக்கிறேன் எனவும் இதன் பின்னர் எனக்காக அவரால் புரியப்படும் எவ்வித செயலுக்கும் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

றம்புக்கன பளிஹவடனகே ஹிரன்த,
பெரேரா.

10-197

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
9(1) ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : டிசிடல் மீடியா நெட்வக் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 78604
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.05.02
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இலக்கம் 3ஏ, பாக் டெரஸ், தெஹிவளை

கம்பனியின் பெயர் : சீ. எல். எச். என்டெபிறைசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79016
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.05.25
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இலக்கம் 329/80, லேக் கிரசென்ட், அத்திடிய, தெஹிவளை

கம்பனியின் பெயர் : அவென்சுரா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79681
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.06.28
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இலக்கம் 421, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 5

கம்பனியின் பெயர் : பிஸ்னெஸ் டிவலொப்மெண்ட் கன்செப்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79684
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.06.28
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இலக்கம் 7/1, ஹோட்டெல் பாதை, கல்கிசை

கம்பனியின் பெயர் : கால்டன் ஸ்போட்ஸ் மனேஜ்மெண்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 80750
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.08.18

பதிவுசெய்யப்பட்ட முகவரி : இலக்கம் 90, 2 ஆம் குறுக்குத் தெரு, பொருபன பாதை, இரத்மலானை
டபிள்யூ. எஸ். வீரமன்,
செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை,
தெஹிவளை.
10-193

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2011.07.07 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜீகோஅஸெற் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 80993
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, செத்தெம்பர் 01
பதிவு அலுவலக முகவரி : இல. 04, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை
கம்பனிச் செயலாளர்.

10-201

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சீவீடா (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 81287
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.09.15
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 87, 2 ஆம் மாடி, புத்தளம் வீதி, சிலாபம்
அமல்கமேற்றற் மனேஜ்மெண்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2011.09.21.
10-116

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ஏடிசி புரபொஷனல் கூரியர்ஸ் (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 80531
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.08.17
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 10/1, அத்திடிய வீதி, கவ்டாண, தெஹிவளை
அமல்கமேற்றற் மனேஜ்மெண்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2011.09.01.
10-117

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : இன்டெர்நஷனல் மினரல் ரிசோர்சஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 81102
பதிவு முகவரி : இல. 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, செத்தெம்பர் 14
கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

10-115

அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அனைவருக்கும் இவ்வாறு அறியத்தருகிறோம் :-

காலி, கராபிட்டிய, முதலாம் குறுக்குத் தெருவில் சன்சைட் கார்டனில் இல. 32/247 எனும் இடத்தில் வதியும் அமுகொட கங்கானம்கே பர்டி லயனல் ஜயசேகர ஆகிய என்னால் உணவடுன, தல்பே வடக்கில், விதானகெவத்தையில் வதியும் வெல்கமகே அனுராத என்பவருக்கு பதியப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட, காலி பிரசித்திபெற்ற நொத்தாரிசான வத்சலா பின்னதுவஹேவா அவர்களால் பதியப்பட்ட 221 ஆம் இலக்க 2009.10.16 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தை இதன் மூலம் இரத்துச்செய்து அதிகாரமிழக்கச் செய்கிறேன்.

இனிமேல் வெல்கமகே அனுராத என்பவரால் எனக்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை சம்பந்தமாகவும், உள்ளடக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இதன் மூலம் அறியத்தருகிறேன்.

அமுகொட கங்கானம்கே பர்டி லயனல் ஜயசேகர.

10-112

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : அக்ரோவெட் எனிமல் ஹெல்த் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 80455
பதிவுத் திகதி : 2011.08.03
பதிவு முகவரி : இல. 105, ஸனஸ ஐடியல், கொழும்பு வீதி, கம்பஹா
செயலாளர்.

10-108/1

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : எல் என் பேப்பர் கொன்வெர்டெர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 80431
பதிவுத் திகதி : 2011.08.12
பதிவு முகவரி : இல. 18, நாவல வீதி, நுகேகொடை
செயலாளர்.

10-108/2

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : கேஜீ கொன்சோலிடேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 80430
பதிவுத் திகதி : 2011.08.03
பதிவு முகவரி : இல. 66, களனி கங்க மில் றோட், கொழும்பு 15
செயலாளர்.

10-108/3

பொது அறிவித்தல்

சமனல பேப்பர் இண்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சமனல புரபர்ட்டி டெவலப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் என்பனவற்றின் ஒன்றிணைப்பு 2011, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையில் இருக்குமாறு மேற்கண்ட இரண்டு கம்பனிகளும் சமனல புரபர்டி டெவலப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரின்கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்றிணைப்பைத் தொடர்ந்து சமனல புரபர்டி டெவலப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் கலைப்பாளரின்கீழ் கொண்டுவரப்படும். ஆவலுள்ள எவரும் இந்த ஒன்றிணைப்புக்கான பிரேரணைகளை ஆராயலாம். நீர்கொழும்பு போலவலான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க வீதி, 23 ஆம் இலக்கத்தில் இவற்றைப் பார்வையிடலாம்.

இந்த அறிவித்தல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 241(4)(பி) பிரிவு விதிகளுக்கு அமைய பிரசுரிக்கப்படுகிறது.

கொம்ஸகி (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்.

2011, செத்தெம்பர் 05.
10-107

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
த சென்ரர் பொர் பமிலி சேர்விசெஸ்
கம்பனியின் பதிவு இல. ஜீஏ 337

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2011, செத்தெம்பர் 5 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 320(1) இன்கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் 'தன்னிச்சையான ஒடுக்குதல்' மூலம் 2011, செத்தெம்பர் 5 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிர்மலி குணதிலக,
விஜித பர்னாந்து,
மனோரி முத்தெட்டுவேகம,
மனிஷா விக்ரமநாயக்க,
ஹென்றி டி மெல்,
அருணாசலம் ஸ்கந்தராஜ்,
லோகநாதன் விஜயநாதன்,
பணிப்பாளர்கள்.

2011, செத்தெம்பர் 05.
10-135/1

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 346(1) இன்கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்
த சென்ரர் பொர் பமிலி சேர்விசெஸ்
கம்பனியின் பதிவு இல. ஜீஏ 337

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், குருநாகல், கட்டுவான வீதி, இல. 259சீ இல் அமைந்துள்ள த சென்ரர் பொர் பமிலி சேர்விசெஸ் கம்பனியின் 2011, செத்தெம்பர் 5 ஆந் திகதி கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் நடைபெற்ற அதனது அதிவிசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மேற்படி கம்பனியின் கலைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம,
ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
த சென்ரர் பொர் பமிலி சேர்விசெஸ்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்சர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4.
2011.09.14.
10-135/2

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, மல்லிகாராம வீதி, 58 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தற்போது வத்தளை-நீர்கொழும்பு வீதி, மஹிந்த மலர்ச்சாலை 288 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பத்மா ஜயசிரி பண்டார ஆகிய என்னால் எனது அற்றோணியாக நியமனம் செய்யும் அற்றோணி தத்துவம் 2011, யூலை 28 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்யப்பட்டது. பகிரங்க நொத்தாரிசு ஆர். சீ. சொய்சா என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2264 ஆம் இலக்க 2010.02.02 ஆந் திகதி கொண்ட அற்றோணி தத்துவம் மற்றும் 2043 ஆம் இலக்க 2008.07.09 ஆந் திகதி கொண்ட அற்றோணி தத்துவம்.

பத்மா ஜயசிரி பண்டார.

10-25

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 8, கிரனியர் வீதி, இல. 12 என்ற முகவரியில் வசிக்கும் நிமலா லியனபடபெந்தி (கடவுச்சீட்டு இல. எல்கேஏ எல்0862639) ஆகிய என்னால் கொழும்பு 8, கிரனியர் வீதி, இல. 12 என்ற முகவரியில் வசிக்கும் சந்தன லியனபடபெந்தி (தேசிய அடையாள அட்டை இல. 640483350வீ) என்பவருக்கு என்னுடைய அற்றோணி தத்துவதாரியாக நியமிக்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு எச். சந்திரகுமாரி த சில்வா அவர்களினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 147 மற்றும் 1999, ஓகத்து 13 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்வதோடு, 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து குறிப்பிடப்பட்ட சந்தன லியனபடபெந்தி என்பவர் எனக்காக செய்யப்படும் எந்தவிதமான ஒப்பந்தங்களுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

நிமலா லியனபடபெந்தி.

10-26

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது :-

கம்பனியின் பெயர் : டிரெக்ட் எப். என். (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 81166
பதிவு முகவரி : 1 ஆவது மாடி, இல. 106, துட்டுகெமுனு வீதி, தெகிவளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, செத்தெம்பர் 08
கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

10-31

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிங்கப்பூர் 189702 ஷொடவர் (முன்பு 31-01) இல. 26-1 பீச் வீதி, 100 ஆம் இலக்க ஸ்தானத்தில் பிரதான அலுவலகத்தைக் கொண்டுள்ள டோய்ப்பெஃர் இன்டெர்நஷனல் ஏசியா பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரான நாங்கள் இலங்கைக் குடியரசு கொழும்பு 8, கரிஷ்ரு கார்டன்ஸ் 7/1 (தே. ஆளடையாள அட்டை இலக்கம் 565650777வீ) இலக்கத்தைச் சேர்ந்த இரோமி தர்ஷினி விஜயசேக்கர என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட 2005, ஒற்றோபர் 14 ஆந் திகதிய 15258 ஆம் இலக்க பதிவாளர் அதிபதி திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் எழுத்துமூலமான பதிவேட்டில் பதிவு 312 மற்றும் 176 ஆம் பொலியோவில் பதிவுசெய்யப்பட்ட சிங்கப்பூர் பகிரங்க நொத்தாரிசு வில்சன் ஹிப் என்பவரால் உறுதிசெய்யப்பட்ட 2005, செத்தெம்பர் 26 ஆந் திகதி கொண்ட அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகிறதென இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கிறேன்.

டோய்ப்பெஃர் இன்டெர்நஷனல் ஏசியா பிறைவேட் லிமிட்டெட்.

10-27

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 243/1, உடுமுல்ல, முல்லேரியாவ புதிய நகரம் விலாசத்திலிருக்கும் சுனீத்தா குரே ஆகிய நான், இல. 243/1, உடுமுல்ல, முல்லேரியாவ புதிய நகரம் என்ற விலாசத்தில் வசிக்கும் விஜேதுங்க லொக்கு பிட்டும்பகே தோன கர்லி சுதர்சனி என்பவரை எனது அற்றோணி அதிகாரமுள்ளவராக நியமித்து பிரசித்திபெற்ற நொத்தாரிசு கே. வீ. சிரிசேன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2007.07.21 ஆந் திகதிய 447 ஆம் இலக்க அற்றோணி அதிகாரப்பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்வதாகவும் இதன்பின் அந்த அற்றோணி அதிகாரத்தின் மீது செய்யப்படுகின்ற எதுவித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்புதாரி அல்ல என்பதனை இலங்கைக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

சுனீத்தா குரே.

10-92

கூட்டிணைப்பு அறிவித்தல்

இது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி செய்யப்படும் விளம்பரமாகும் :-

கம்பனியின் பெயர் : ராவணாகந்த ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 80952
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, ஓகத்து 29
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 36, பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1
நிர்வாக சபையின் ஆணையின்படி,
ராவணாகந்த ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்,
ஹேமாஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-37/1

கூட்டிணைப்பு அறிவித்தல்

இது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி செய்யப்படும் விளம்பரமாகும் :-

கம்பனியின் பெயர் : களுத்துறை லக்சறி ஹோட்டல் அன்ட் ரிசோட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 80869
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, ஓகத்து 24
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 36, பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1
நிர்வாக சபையின் ஆணையின்படி,
களுத்துறை லக்சறி ஹோட்டல் அன்ட்
ரிசோட் (பிறைவேட்) லிமிட்டெட்,
ஹேமாஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-37/2

ஏல விற்பனைகள்

சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. : 1068 5330 6450 - டபிள்யூ. பீ. ஜீ. சிந்தக்க

